## சுருக்கம்

நிர்வாகம் – மருத்துவர் வி.சுந்தர் (ஒப்பந்த மருத்துவர்) உதவிப்பேராசிரியர், நெஞ்சக நோய் பிரிவு, சென்னை மருத்துவக் கல்லூரி சென்னை– நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இ1) துறை

அரசு ஆணை (நிலை ) எண்.224

நாள்:05. 08.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய ஆடி–20

படிக்கப்பட்டது

1) அரசு கடித எண் 14643/A1/2013-3, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 02.07.2013.
2) அரசு கடித எண் 10698/A1/2014, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 03.04.2014.
3) மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்.30379/நி3/4/2014 நாள் 20.06.2014

•••••••••

ஆணை

மேலே படிக்கப்பட்ட அரசு கடிதம் 1–ல் மருத்துவர் வி.சுந்தர், ஒப்பந்த அடிப்படையில் சென்னை அரசு மருத்துவக் கல்லூரி, நெஞ்சக நோய் பிரிவில் காலியாக உள்ள பணியிடத்தில் உதவிப்பேராசிரியராக நியமனம் செய்யவும், ஐந்தாண்டுகள் அல்லது தேவை நிறைவடையும் வரை இவற்றுள் எது முன்னதோ அதுவரையில் மாதம் ரூ.35,000/– (ரூபாய் முப்பந்தைந்தாயிரம்) தொகுப்பூதியமாக வழங்கவும் அனுமதிக்கப்பட்டது.

2. மேலும், படிக்கப்பட்ட அரசு கடிதம் 2–ல், அன்னாரது ஒப்பந்த பணிநியமனத்தை ஓராண்டு நீட்டித்து (03.07.2014 முதல் 2.07.2015 வரை) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அன்னார் 03.07.2013 முதல் 02.07.2014 வரை தொடர்ந்து பணிபுரிந்துள்ளார்.

3. மேற்படி மருத்துவருக்கு, 2014–15க்கு ஒப்பந்த ஊதியமாக ரூ.4,90,000/– தேவைப்படுவதாக மருத்துவக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. அரசு இக்கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை, நெஞ்சக நோய் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடத்திற்கு பிப்ரவரி 2014 முதல் மார்ச் 2015 வரையிலான (14 மாதங்கள்) காலத்திற்கு ஒப்பந்த ஊதியமாக ரூ.4,90,000/–(ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> 2210– மருத்துவம், பொது சுகாதாரமும் 05– மருத்துவக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 105– ஆங்கில முறை மருத்துவம் I – திட்டத்தில் சேராதது – AA- சென்னை மருத்துவக் கல்லூரி 33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் –04 ஒப்பந்த ஊதியம் (த.தொ.கு 2210 05 105 AA-3342)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் 2014–15 ஆம் ஆண்டுக்கான திருத்திய /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி இத்தொகையினை பெற்று வழங்கிட, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகையினை 2014–15 ஆம் ஆண்டிற்கான திருத்திய /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் தவறாது சேர்த்து அரசின் நிதித் துறைக்கு அனுப்பிவைக்குமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7.இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.39366/சுகாதாரம்II/நாள்:01.08.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.825 (எண்ணூற்று இருபத்தைந்து)–ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்,
அரசு சிறப்புச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி/ ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை–600 003.
மாநில கணக்காயர் சென்னை –18
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –35
குடிமுறை தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை –9
நகல்
நிதி (சுகாதாரம் II/வ.செ.(பொது)–II/)த் துறை சென்னை–19
இருப்புக் கோப்பு/உதிரிகள்/இணையதளம் /டேட்டா செல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/8
பிரிவு அலுவலர்